செய்தித் துறை வெளியீடு 854, நாள் 03.10.2010

# அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் திரிபுரா மாநில ஆளுநர்

இன்று (3.10.2010) காலை 9 மணிக்கு திரிபுரா மாநில மேதகுஆளுநர் டாக்டர்.டி.ஒய்.பட்டீல் அவர்கள் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு வருகை புரிந்தார்.

மேதகு ஆளுநர் அவர்களுக்கு நூலகத்தின் பல்வேறு பகுதிகளை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம்தென்னரசு அவர்கள் சுற்றி காண்பித்து இதன் சிறப்பு அம்சங்களை விளக்கிக் கூறினார்.

நூலகத்தின் பிரமாண்டத்தை பார்த்து வியப்பு தெரிவித்த ஆளுநர், நூலகம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டுள்ளது என்றும் இது போன்ற நூலகத்தை இந்தியாவில் வேறு எங்கும் தான் பார்த்ததில்லை என்றும் இப்பிரம்மாண்டமான நூலகத்தைக் கட்டும் வல்லமை தமிழக முதல்வருக்கு தான் உண்டு என்றும் தெரிவித்தார். மேலும் மக்கள் நல்வாழ்வுக்கு பயன்படும் பல திட்டங்களை தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்து தனது பாராட்டினைத் தெரிவித்தார்கள்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பார்வையிட தேவையான அனைத்து ஏற்பாடுடுகளையும் செய்து தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் திரிபுரா ஆளுநர் தெரிவித்தார்.

அறிவுப் புரட்சியில் இந்நூலகம் தமிழக மக்களுக்கு சிறப்பான வகையில் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

முன்னதாக திரிபுரா ஆளுநர் அவர்களை மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வரவேற்றார் உடன் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் ஜோதி ஜெகராசன், பிரபல பல்மருத்துவர் பாலாஜி, பொது நூலக இயக்குநர் க.அறிவொளி மற்றும் அலுவலர்கள் இருந்தனர்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை சென்னை –9